# காத்தான்குடி நகர சபை
# மட்டக்களப்பு மாவட்டம்.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 25 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய காத்தான்குடி நகர சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய காத்தான்குடி நகர சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓர் ஆண்டிற்கு மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,857,006 ஆகும்.

#### 1.3.2 இணங்காமைகள்

கீழே காட்டப்பட்ட விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவைகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்வற்றுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1769 ஆம் இலக்க 1992 செப்தெம்பர் 30 ஆந் திகதிய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்திற்கு முரணாக ரூபா 148,227 தொகையான வரைதற் கட்டணங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவை இல. 3.9.1 | கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு முரணாக ரூபா 5,400,000 பெறுமதியான 03 சனசமூக நிலையங்களின் சிவில் வேலைகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவு | ரூபா 2,735 தொகையான 5% நிறுத்தி வைத்தல் வரி கொடுப்பனவுகளின் போது கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நிதிப் பிரமாணம் இல. 685 | கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் கொங்ரீட் தூணும் பெரலும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 19,450 தொகை செலவிடப்பட்டிருந்தன. |
| (உ) | நிதிப் பிரமாணம் இல. 138 | பொறுப்பான உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலின்றி ரூபா 14,334 தொகையான மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,415,911 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய

ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 349,106 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானங்கள் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 7,719 | 13,696 | 6,076 | 4,485 | 5,954 | 5,976 |
| (ii) | குத்தகை வாடகைகள் | 2,034 | 2,046 | 282 | 1,073 | 1,073 | - |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 3,118 | 3,122 | - | 1,649 | 1,716 | 12 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 3,502 | 3,502 | 43 | 4,423 | 4,423 | 04 |

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 முரண் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா000 | ரூபா000 | ரூபா 000 | ரூபா000 | ரூபா 0000 | ரூபா 0000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 27,244 | 28,536 | (1,292) | 21,067 | 25,687 | (4,620) |
| ஏனையவை | 5,552 | 5,802 | (250) | 5,954 | 3,752 | 2,202 |
| உப மொத்தம் | 32,796 | 34,338 | (1,542) | 27,021 | 29,439 | (2,418) |
| மூலதனச் செலவினம் | 7,620 | 4,460 | 3,160 | 40,825 | 5,375 | 35,450 |
| முழு மொத்தம் | 40,416 | 38,798 | 1,618 | 67,846 | 34,814 | 33,032 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி**

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் தரங்கள் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| பதவிநிலைத் தரம் | 01 | 01 |
| இரண்டாம் தரம் | 19 | 18 |
| ஆரம்பத் தரம் | 64 | 62 |
| ஏனைய (அமைய/ தற்காலிக) | - | 40 |

| | | |
|---|---|---|
| | ---------- | -------- |
| | 84 | 121 |
| | ==== | ===== |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்குகளின் மீதிகள் ரூபா 2,811,060 ஆக இருந்தது.

### 2.5.2 பயன்படுத்தப்படாமல் மற்றும் குறைவாகப் பயன்படுத்திய பௌதீக வளங்கள்

ரூபா 195,000 பெறுமதியான மோட்டார் வாகனங்கள் 04 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்படாமல் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டு இருந்தமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.6 அறவிடவேண்டிய பதவியினர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேலாக அறவிட வேண்டிய பதவியினர் கடன்மீதிகள் ரூபா 42,110 ஆகும்.

## 2.7 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக மெய்மையாய்வு / கணிப்பீட்டுச் சபை அறிக்கைகளால் உறுதிப்படுத்தப்படாத புத்தக மீதிகளில் கணிப்பிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 17,935,753 ஆகும்.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

சபையால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிர்வாகம்